# செய்தி வெளியீடு

**செய்தி வெளியீடு எண்.97/2023 நாள் : 10.12.2023**

**<u>சென்னை குடிநீர் வாரியத்தின் சார்பில் பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட அனைத்து பகுதிகளிலும் 09.12.2023 அன்று 987 மில்லியன் லிட்டர் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் குழாய்கள் மூலமாகவும் லாரிகள் மூலமாகவும் வழங்கப்பட்டது.</u>**

**<u>சென்னை குடிநீர் வாரியம் தகவல்</u>**

சென்னை குடிநீர் வாரியத்தின் சார்பில் பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட அனைத்து பகுதிகளிலும், 115 குடிநீர் பகிர்மான நிலையங்கள், 5 குடிநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் மற்றும் 1 கடல்நீரை குடிநீராக்கும் நிலையம் மூலமாக 987 மில்லியன் லிட்டர் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர், குழாய்கள் மூலமாகவும் லாரிகள் மூலமாகவும் 09.12.2023 அன்று வழங்கப்பட்டது. மேலும், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட தாழ்வான பகுதிகளில் லாரிகளின் மூலம் குடிநீர் வழங்கப்பட்டுவருகிறது. மேலும், தற்காலிக HDPE குடிநீர்த் தொட்டிகள் மற்றும் வளையக்கூடிய குழாய்கள் மூலம் பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் 341 கழிவுநீர் அகற்றும் நிலையங்கள் மற்றும் 21 கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களின் மூலம் கழிவுநீரகற்றும் பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கழிவுநீர் பிரதான குழாய்களில் ஏற்பட்டுள்ள அடைப்புகளை சரி செய்வதற்காக கடந்த மூன்று தினங்களில் 228 தூர்வாரும் இயந்திரங்கள், வாரியத்தின் 60 அதிவேக கழிவுநீர் உறிஞ்சும் இயந்திரங்கள் மற்றும் வெளி மாவட்டங்களிலிருந்து கூடுதலாக வரவழைக்கப்பட்ட 90 வாகனங்கள் என மொத்தம் 150 அதிவேக நீர் உறிஞ்சும் இயந்திரங்கள், 123 ஜெட்ராடிங்

இயந்திரங்கள் என 501 இயந்திரங்களைக் கொண்டு கழிவுநீர் அடைப்புகள் அதிகமுள்ள 1,303 தெருக்களில் உள்ள 3886 இயந்திர நுழைவாயில்களில் ஏற்பட்ட அடைப்புகள் சரி செய்யப்பட்டது. மேலும், தாழ்வான பகுதிகளில் தேங்கியிருந்த மழைநீர் அகற்றும் பணிகளில் 150 அதிவேக கழிவுநீர் உறிஞ்சும் இயந்திரங்கள் மற்றும் 104 கழிவுநீர் லாரிகள் ஈடுபடுத்தப்பட்டு 1285 தெருக்களில் தேங்கியிருந்த மழைநீர் 3327 லாரி நடைகள் மூலம் அகற்றப்பட்டது. தற்போது, கழிவுநீரகற்றும் பணிகளில் 2149 களப்பணியாளர்கள் முன்களப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

மேலும், அனைத்து பகுதிகளிலும் கழிவுநீர் பிரதான குழாய்களில் ஏற்படும் அடைப்புகளை தூர் வாருவதற்காக இரவு முழுவதும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இயந்திர நுழைவாயில்கள், கழிவுநீர் உந்துநிலையங்கள் ஆகியவற்றில் தொடர்ந்து இரவுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, கழிவுநீர், சுத்திகரிப்பு நிலையங்களுக்கு இடையூறு இல்லாமல் கொண்டு செல்வதற்கான அனைத்து பணிகளும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும், பொதுமக்கள் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்றல் தொடர்பான புகார்கள் தெரிவிப்பதற்கு ஏதுவாக சென்னை குடிநீர் வாரியத்தின் தலைமை அலுவலகத்தில் 24 மணி நேரமும் செயல்பட்டு வரும் கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாட்டு மையத்தை 044-4567 4567 (20 இணைப்புகள்) மற்றும் கட்டணமில்லா தொலைபேசி எண்.1916-ல் தொடர்பு கொள்ளலாம்,

வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு மேலாளர்,
சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும்
கழிவு நீரகற்று வாரியம்

சென்னை குடிநீர் வாரியத்தின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள
CHN_Metro_Water CMWSSB chennaimetrowater